வாழ்வணங்கை வரிப்பதற்கு எதுவரினு மஞ்சேன்;
வானத்து வீதியிலே ஏறிடவும் தயங்கேன்.
சூழ்புவியின் திசையதிர உறுமுகின்ற ராக்கெட்
துணைகொண்டு பறந்திடுவேன் அண்டவெளிப் பயணம்.
ஆளரவங் கேட்காத தொலைதூரமுள்ள
அண்ட சராசரங் காணச் சென்றிடுவேன் தனியே.

நீண்டவான் தனைநோக்கி நிற்பதிலே எனக்கு
நெஞ்சினிலே பொங்கியெழும் ஆனந்தக் களிப்பு!
ஊனுலகில் வாழ்வதற்கு உயிர் தாங்கி யிருக்க
உவகை மிகக் கொண்டிடுவேன் இன்பமதைப் பெருக்க.
ஆனாலென் னுறுதியிலே திவலையளவேனும்
அகற்றிட நீ ஒருவேளை எண்ணிடுவை யாகில்!
கானுறையும் பாய்புலிக்குக் காயமது பட்டால்
கடிநாகச் சீறுதல்போல் வெம்பியுளங் கொதிப்பேன்.

உறுதியது குலைந்த பின்னர் மீதமென்ன உண்டு?
உடைமை பறிபோயினபின் குழப்பந்தான் மிஞ்சும்.
அறுதியிட்டுச் சொல்லிடுவேன், அழுத்தமொடு உரைப்பேன்;
அடையாளந் தெரியாது—உறுதி பறிபோயின்.